Day long Annadhanam Scheme

| | |
|---|---|
| நாள்முழுவதும் அன்னதானத்திட்டம் தொடங்கப்பட்ட நாள் விபரம் | 2012–2013ம் நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் பழநி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் மற்றும் ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில்களில் நாள் முழுவதும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கும் திட்டம் துவக்கப்படவுள்ளது என அறிவிக்கப்பட்டது. மேற்படி அறிவிப்பினைத் தொடர்ந்து 13.09.2012ம் தேதி முதல் காலை 8.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை பழநி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டம் துவக்கப்பட்டது. |
| நாள் 1க்கு | சராசரியாக 4500 பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டுள்ளது. |
| திருவிழா நாட்களில் | தினசரி 6500 முதல் 7000 பக்தர்கள் வரை உணவருந்தி வருகின்றனர். |
| இருக்கை வசதிகள் | சாதாரண நாட்களில் 200 பக்தர்கள் அமர்ந்து உணவருந்தும் வகையில் இருக்கை வசதிகள் செய்யப்பட்டுள்ளது |
| | விசேஷ நாட்களில் 400 பக்தர்கள் அமர்ந்து உணவருந்தும் வகையில் இருக்கை வசதிகள் செய்யப்பட்டுள்ளது. |
| குடிநீர் வசதி | பக்தர்களுக்கு சுத்தீகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. |
| அன்னதான சமையல் கூடம் வசதி | நவீனமான முறையில் கேஸ் அடுப்பு அமைத்தும், நீராவி கொதிகலன் மூலம் உணவு வகைகள் சமைக்கப்படுகிறது. காய்கறிகள் சேமித்து வைக்க குளிர்சாதன வசதி செய்யப்பட்ட அறையும், பலசரக்கு சாமான்கள் வைக்க தனியாக சரக்கறையும் உள்ளது. பக்தர்கள் உணவருந்தும் கூடத்தில் உணவு பரிமாற நவீன ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் மேஜைகள் மற்றும் |

| | |
|---|---|
| | பக்தர்கள் அமர்ந்து உணவருந்தும் வகையில் நாற்காலிகளும் அமைக்கப்பட்டுள்ளது. உணவு கூடத்தில் பக்தர்கள் கை கழுவுவதற்கு வசதியாக நான்கு ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் கை கழுவும் கலன்கள் பொருத்தப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு பந்தியும் முடிவடைந்தவுடன் அன்னதானக்கூட தரைதளம் அவ்வப்போது நவீன சுத்தம் செய்யும் இயந்திரம் மூலம் உலரவைக்கப்படுகிறது. |
| நன்கொடையாளர்கள் பயன்பெறும் விபரம் | இத்திட்டத்தில் ரூ.20,000/– முதலீடு செய்யும் அருளன்பர்கள் அவர்கள் விரும்பும் நாளில் வருடத்தில் ஒரு நாள் அவர்கள் பெயரில் 100 நபர்களுக்கு அன்னதானம் வழங்கவும் அனுமதி பெறப்பட்டுள்ளது. |